## கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2013

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைசாத்திட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டியலின் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5 ஆம் பட்டியலின் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, கொழும்பு மா நகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் செயற்திட்டத்தின் நிறைவேற்றலுக்கான பொறுப்பு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முன்னேற்றப்பட்ட கடல்சார் மற்றும் உள்நாட்டின் தண்ணீர் தரம் மற்றும் அதன்விளைவான உடல்நல மற்றும் சுகாதார நிலைமை முன்னேற்றம் என்பவற்றின் ஊடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள நகர மற்றும் புறநகர் பகுதிகளில் 1.5 மில்லியன் வதிவிடத்தினருக்காக நகர சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 109.12 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 94.37 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ஐ.அ.டொலர் 14.75 மில்லியன் இலங்கை அரசாங்காத்தால் நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. என்னும், செயற்திட்டத்தின் காலம் 2017 யூன் 30 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும்

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து

உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்குகளிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததனவா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 834,577,073 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,493,930,206 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| **செலவின விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஆலோசனை சேவை கட்டணங்கள் | 125,462,716 | 226,825,983 | 474,559,741 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 664,062,882 | 229,535,268 | 902,437,416 |
| நிதிக் கட்டணங்கள் | 20,720,465 | 17,985,874 | 59,126,838 |
| சமூக இணக்கப்பாடு | - | 66,000 | 871,120 |
| பயிற்சிச் செலவினங்கள் | 1,416,309 | 1,413,010 | 2,829,319 |
| அதிகரிக்கும் கிரயம் | 22,914,701 | 15,388,835 | 54,105,772 |
| | 834,577,073 | 491,124,970 | 1,493,930,206 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தவல்களின்படி, வீசெட செயற்பாடுகள் மற்றும் சாதாரண செயற்பாடுகளிற்காக இரண்டு புறம்பான கட்டுநிதி நிதியக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2013 திசெம்பர் 31ஆம் ஆண்டின் போது இரண்டு கட்டுநிதி நிதியக் கணக்குகளின் செயற்பாடுகள் மற்றும் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அக்கணக்குகளில் இருந்த மீதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

(அ) ஆடிபீ கடன் இல. 2557- எஸ்ஆர்ஜ எஸ்எல் 140 (சாதாரண செயற்பாடுகள்)

| | **யூ.எஸ்.டொலர்** | **ரூபா** |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 162,633.98 | 20,680,667 |
| கூட்டுக: | | |
| மீள் நிரப்பல்கள் | 98,709.53 | 12,990,175 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 473,034 |
| | 261,343.51 | 34,143,876 |
| கழி:- | | |

| | | |
|---|---|---|
| பற்றுதல்கள் | 111,224.93 | 14,515,421 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 150,118.58 | 19,628,455 |

(ஆ) ஏடிபீ கடன் இல. 2558- எஸ்ஆர்ஜ எஸ்எல் 141 (விசேட செயற்பாடுகள்)

| | யூ.எல்.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 4,300.90 | 546,906 |
| கூட்டுக: | | |
| மீள் நிரப்பல்கள் | 1,749,371.42 | 224,189,587 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 2,456,117 |
| | 1,753,672.32 | 227,192,610 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 1,263,192.41 | 163,060,891 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 490,479.91 | 64,131,719 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### சொத்துக்கள் முகாமைத்துவம்

செயற்திட்டமானது கழிவுநீர் முகாமைத்துவத்திற்காக ரூபா 577.82 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், கணனிகள் மற்றும் உப பாகங்கள் போன்ற அத்தகைய சொ்துக்களின் பௌதீக மெய்மையாய்விற்குப் பயன்படுத்துவதற்காக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

கடல் வெளப் பாய்ச்சல்களின் புனரமைப்பிற்கான ஒப்பந்த உடன்படிக்கையின்படி, ஒப்பந்தகாரர் செயற்திட்ட பொறியியலாளர்களால் பயன்படுத்துவற்காக 02 டபிள் கப் மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு வேண்டப்பட்டிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக அளவீட்டுப் பட்டியலில் ஐ.அ.டொலர் 100,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலையான சொத்துப் பதிவேட்டில் தகவல்கள் இன்மை காரணமாக சொத்தக்களின் பௌதீக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

## 6. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான திரட்டிய ஏற்பாடு மற்றும் உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டில் பயன்படுத்தப் பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை திரட்டிய பாதீட்டு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில் |
| ஏடிபீ | 94.37 | 10,380.70 | 810.00 | 674.90 | 2,800.00 | 9.57 | 1,245.56 |
| இலங்கை அரசாங்கம் | 14.75 | 1,622.83 | 110.00 | 110.00 | 415.00 | - | 198.69 |
| மொத்தம் | 109.12 | 12,003.53 | 920.00 | 784.90 | 3,215.00 | 9.57 | 1,444.25* |

* இந்த அட்டவணையில் காட்டப்பட்ட தொகைகள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு இந்த அறிக்கையன் 4.1 ஆம் பிரிவில் காட்டப்பட்டவாறு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செயற்திட்ட செலவினத்துடன் உடன்பட்டிருக்கவில்லை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி, செயற்திட்ட காலத்தின் 52 சதவீதம் காலாவதியான பின்னரும் கூட மொத்த ஒதுக்கப்பட்ட தொகையில் 8.77 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 9.75 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் 08 ஆக்கக் கூறுகளிற்காக 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் ரூபா 920 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டின் 7.6 சதவீதமானவை செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்த ஏற்பாடுகளின் 85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 784 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடுகளின் குறைபயன்பாட்டு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விடயம் | 2013 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை | 2013 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செலவினம் | குறை பயன்பாட்டு தொகை |
|---|---|---|---|

| | | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
|---|---|---|---|---|
| (1) | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுலாக்கல் ஆதரவு | | | |
| 1.1 | செயற்திட்ட முகாமைத்துவம் (வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ ஆலோசனை) மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி ஆலோசனை | 180,000,000 | 150,946,624 | 29,053,376 |
| 1.2 | பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | 2,000,000 | 1,811,519 | 188,481 |
| 1.3 | சீஎம்சீ இல் செயற்திட்ட நிர்வாகம் | 45,000,000 | 36,681,633 | 8,318,367 |
| (2) | நிறுவனரீதியான மற்றும் செயற்பாட்டு இயலளவு வலுப்படுத்தல் | | | |
| 2.1 | நிறுவனரீதியான ஆதரவுக்கான உபகரணங்கள் | 10,000,000 | 2,396,386 | 7,603,614 |
| 2.2 | இயலளவு அபிவிருத்தி (ஏழைகளுக்காதரவான சுகாதார ஆலோசனை, பொது மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம், அரசசாற்பற்ற அமைப்புக்கள்) | 6,000,000 | - | 6,000,000 |
| (3) | சாக்கடை உட்கட்மைப்பை தரமுயர்த்தல் | | | |
| 3.1 | சிவில் வேலைகள் | 300,000,000 | 222,901,827 | 77,098,173 |
| 3.2 | சீஎம்சீ இல் உட்கட்மைப்பு (நிலையற்ற செயற்பாட்டு உபகரணங்களின் வழங்கல்) | 355,000,000 | 349,444,759 | 5,555,241 |
| 3.3 | சீஎம்சீ மீதான வட்டிக் கட்டணங்கள் | 22,000,000 | 20,720,465 | 1,279,535 |
| | மொத்தம் | 920,000,000 | 784,903,213 | 135,096,787 |

## 6.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் ஆக்கக்கூறுகளின் இலக்குகளை அடைவதற்காக செயற்திட்டத்தின் தொடக்கத்தில் விரிவான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நிதி இலக்குகளுடனான செயல் நடவடிக்கைத் திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை திருப்திகரமாக இருக்கவில்லை. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டத்தின் பின்வரும் ஆக்கக்கூறுகளின் கீழ் ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திரண்ட மணற்கற்களை அகற்றுதல் உள்ளடங்கலாக கடல் பாய்ச்சலின் திருத்தங்கள்

(ii) கொழும்பு மாநகர சபை பகுதியில் புதிய நீர்க் குழாய் நிலையங்களின் நிர்மாணமும் நீர்க் குழாய் நிலையங்களின் புனரமைப்பும்

(iii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்படுத்தும் நீர் குழாய் நிலையங்களின் நிர்மாணம்/ புனரமைப்பு

(iv) கொழும்பு மாநகர சபை பகுதியில் நிலக் கீழ் சாக்கடைகளின் நிர்மாணம்.

(ஆ) குழாய் நிலைய புலனாய்வுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், விரிவான வடிவமைப்பு மற்றும் சாக்கடையற்ற பகுதிகளின் எதிர்கால விரிவாக்கலிற்கான கேள்வி தயாரிப்புகள், இரண்டாம் நிலை நடவடிக்கைகளுக்கான திட்டமிடல், அவற்றின் மீதான ஆரம்ப வடிவமைப்புகளை தயாரித்தல், ஜீஐஎஸ் படங்கள்/ தரவுநிரற்படுத்தல் மற்றும் வலையமைப்பு மாதிரிகளின் தயாரிப்பு மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் கைநூல்களின் தயாரிப்பு போன்றன உரிய திகதிகளில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலும், 2013 ஆம் ஆண்டிற்காக வடிவமைப்பு ஆலோசனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட இலக்குகள் திருப்திகரமாக அடையப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிறுவனரீதியான அபிவிருத்திகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம், சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை மற்றும் முதலீட்டு திட்டமிடல் என்பவற்றின் செய்யப்பட்ட இலக்குகள் மெதுவான முன்னேற்றத்தை காட்டுகின்றது.